இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 262 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 21 – திங்கள்கிழமை 04 மே 2026 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 262 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 21 - Monday 04 May 2026 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## மே 4–ந் தேதி நல்ல செய்தி வரும்!

# தி.மு.கழக ஆட்சி மீண்டும் தொடரும்!

### மே தின விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, மே 4–**

**மே தின விழாவில் உரையாற்றிய கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் "மே 4–ந் தேதி நல்ல செய்தி வரும், தி.மு.கழக ஆட்சி மீண்டும் தொடரும்" என்று உறுதிபடக் கூறினார்.**

கழகத் தலைவர் – முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உழைப்பாளர் நாளை முன்னிட்டு, சென்னை மே தினப் பூங்காவில் ஆற்றிய உரை வருமாறு: –

உரிமைக்காகவும், உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடும் இந்த மே முதல் நாள் கொண்டாடப்படுகிறது. இந்தியாவிலேயே முதன்முதலில் இந்த மே முதல் நாளைச் சென்னையில்தான் நாம் கொண்டாடத் தொடங்கி இருக்கிறோம். சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்கள் தலைமையில்தான் முதன்முதலாகச் சென்னை மாநகரத்தில் இந்த மே முதல் நாள் கொண்டாடப்பட்டிருக்கிறது.

**உழைப்பிற்கு நல்ல பலன்!**

உழைப்புக்கேற்ற ஊதியம், தொழிலாளர்களின் உரிமை, அதேபோன்று இன்றைக்கு நம்முடைய கழகத் தோழர்கள் உழைத்திருக்கும் உழைப்பிற்கான பலன் வரும் 4ஆம் தேதி பெற இருக்கிறோம். அதில் துளி அளவு கூட மாற்றமில்லை. இதை ஏதோ கருத்துக் கணிப்பின் அடிப்படையில் நான் சொல்கிறேன் என்று யாரும் கருத வேண்டிய அவசியம் இல்லை. கழகத் தோழர்களை நான் உணர்ந்து கொண்டிருக்கும் காரணத்தினால் அந்தக் கருத்தை நான் எடுத்து வைத்திருக்கிறேனே தவிர வேறொன்றும் இல்லை.



உலக உழைப்பாளிகளின் திருநாளாம் மே தினத்தையொட்டி 01.05.2026 அன்று காலை 7.30 மணியளவில் சென்னை சிந்தாதிரிப்பேட்டை மே தினப் பூங்காவில் அமைந்துள்ள மேதின நினைவுச் சின்னத்திற்கு கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலரஞ்சலி செலுத்தி உரையாற்றினார்.

இன்று மே முதல் நாளை, தொழிலாளர்களுக்குரிய மரியாதையையும், மதிப்பையும், அவர்களது உரிமையையும் போற்றும் வகையில் நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

**மே முதல் நாள் அரசு விடுமுறை!**

மே முதல் நாள் – பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், உடனடியாக இந்நாளை அரசு விடுமுறையாக அறிவித்துக் கொண்டாடத் தொடங்கினார். ஊதியத்துடன் கூடிய விடுமுறையாக அறிவித்தது மட்டுமல்லாமல், அந்த விடுமுறை நாளைச் சட்டமாக்கித் தந்தவர் அண்ணாவிற்குப் பிறகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டில் மட்டும் தான் இந்த மே முதல் நாள் அரசு விடுமுறையாகக் கொண்டாடப்பட்டு வந்தது. இதனை இந்தியா முழுவதும் கொண்டு வர வேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்துச் சொன்னார். நாடாளுமன்றத்தில் நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் இதற்காகக் குரல் எழுப்பினார்கள். அப்போது பிரதமராக இருந்த வி.பி.சிங் அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டு, தமிழ்நாட்டில் மட்டுமல்லாது, இந்தியா முழுமைக்கும் ஊதியத்துடன் கூடிய அரசு விடுமுறையாக அறிவித்து, அதுவும் இன்றைக்கு கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இன்னும் இரண்டு நாட்களில் தேர்தல் முடிவுகளை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு ஒரு நல்ல செய்தி வரும் என்ற நம்பிக்கை அனைவருக்கும் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, 'எல்லாருக்கும் எல்லாம்' என்ற தத்துவத்தின் அடிப்படையிலான கொள்கையோடுதான் நாம் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். அது தொடரும், தொடரும், தொடரும் என்ற உறுதியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மே நாள் நினைவுப் பூங்காவை உருவாக்கியவர் கலைஞர்!**

இந்த மே நாள் நினைவுப் பூங்காவைத் தலைவர் கலைஞர் அவர்கள்தான் உருவாக்கித் தந்தார்கள். இந்தப் பூங்காவில் அமைக்கப்பட்டிருக்கும் நினைவுச் சின்னமும் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டதுதான். அது எப்படி அமைய வேண்டும் என்பதற்காகப் பலமுறை இந்த இடத்திற்கு நேரடியாக வந்து, அனைத்தையும் சரிசெய்து உருவாக்கித் தந்தார். எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், தொழிலாளர்கள் மீதும், தொழிலாளர்களின் உரிமைகள் மீதும் தலைவர் கலைஞர் அவர்கள் எந்த அளவிற்கு நம்பிக்கை வைத்திருந்தாரோ, அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக நான் மட்டுமல்ல, நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம், பணியாற்றுவோம், உழைப்போம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## சிலிண்டர் விலை உயர்வு:

# மக்களின் துயரை எண்ணிப் பார்த்து தீர்வு காணுங்கள்!

### ஒன்றிய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, மே 4–**

**வணிக சிலிண்டர் விலை உயர்வு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில் "மக்களின் துயரை எண்ணிப் பார்த்து தீர்வு காணுங்கள்" என்று ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ளார்.**

ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முடிவடைந்த நிலையில், வணிகப் பயன்பாட்டிற்கான எரிவாயு சிலிண்டர் விலையை ஏறத்தாழ ஆயிரம் ரூபாய் அளவுக்கு எண்ணெய் நிறுவனங்கள் நேற்று முன்தினம் உயர்த்தின.

தேர்தல் பரப்புரையின் போது பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்த்தப்படாது என மக்களிடம் பொய்களை கூறி வாக்கு சேகரித்த பிரதமர் மோடி, தற்போது தேர்தல் முடிந்த உடன் விலையை உயர்த்தி மக்களின் முதுகில் குத்தி துரோகம் செய்துள்ளதாக எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

இந்நிலையில், வணிகப் பயன்பாட்டு சிலிண்டர் விலையை தொடர்ந்து, பெட்ரோல், டீசல் மற்றும் வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை உயர்த்த எண்ணெய் நிறுவனங்கள் ஒன்றிய அரசிடம் அனுமதி கோரியுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. விரைவில் பெட்ரோல் மற்றும் டீசல் விலை லிட்டருக்கு 5 முதல்10 ரூபாய் வரையும், வீட்டு சமையல் சிலிண்டர் 50 ரூபாயும் உயர்த்தப்படலாம் என்று கூறப்படுகிறது.




உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்தபோது, அதன் பலனை மக்களுக்கு அளிக்காத எண்ணெய் நிறுவனங்கள் தற்போது மேற்காசிய போரை காரணம் காட்டி பெட்ரோலியப் பொருட்களின் விலையை உயர்த்துவதை தவிர்க்க வேண்டும் என அனைத்துத் தரப்பினரும் வலியுறுத்தியுள்ளனர். ஒன்றிய பா.ஜ.க. அரசின் மோசமான நிர்வாகத்தினால் ஏற்பட்ட பாதிப்பை, மக்கள் மீது திணிப்பதா என்றும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:–

**தேர்தலுக்கு முன்பே கணித்ததுபோல், தேர்தல் முடிந்தவுடன் #LPGPriceஐ உயர்த்தியிருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.**

**உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்தபோது, அதன் பலனை மக்களுக்கு அளிக்கவில்லை. இப்போது #WestAsiaWar என்ற நெருக்கடியை வைத்து, மக்களின் நலனை எண்ணாமல், விலையை ஏற்றுவது சரியல்ல.**

**இந்த #LPGPriceHike ஏற்படுத்தும் தாக்கங்களை உணர்ந்து, இந்த விலை உயர்வை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும். மக்களின் வாழ்வாதாரத்தைக் காக்க வேண்டும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## சமையல் எரிவாயு விலையை உயர்த்தி

# மக்களின் முதுகில் குத்தியுள்ளார் மோடி!

### திரிணாமுல் காங்கிரஸ் கட்சி கண்டனம்!

கொல்கத்தா, மே 4-

தேர்தல் முடிந்த உடன் சமையல் எரிவாயு மற்றும் எல்.பி.ஜி. விலையை உயர்த்தி மக்களின் முதுகில் குத்தியுள்ளார் பிரதமர் மோடி என திரிணாமுல் காங்கிரஸ் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், தேர்தல் முடிந்த உடன் ஒன்றிய பா.ஜ.க. அரசு விலை உயர்வை அறிவித்துள்ளது என குற்றஞ்சாட்டியுள்ளது. தேர்தல் பரப்புரையின் போது விலை உயர்த்தப்படாது என மக்களிடம் பொய்களை கூற வாக்கு சேகரித்த பிரதமர் மோடி மற்றும் ஒன்றிய அமைச்சர்கள், தேர்தல் முடிந்த உடன் விலையை உயர்த்தி மக்களின் முதுகில் குத்தி துரோகம் செய்துள்ளதாக விமர்சித்துள்ளது. இது வெறும் தொடக்கம்தான், தேர்தல் முடிந்த பிறகு பா.ஜ.க. அரசு வீட்டு உபயோக சிலிண்டர் மற்றும் பெட்ரோல் டீசல் விலையையும் உயர்த்தும் என்றும் எச்சரித்துள்ள திரிணாமுல் காங்கிரஸ் கட்சி, மக்கள் இதனை மறக்கக் கூடாது என்றும் தெரிவித்துள்ளது.

---

## பெட்ரோல் – டீசல் விலையும் உயர்த்தப்படும்!

# வணிக சமையல் எரிவாயு சிலிண்டர் விலை உயர்வு!

### எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி கடும் கண்டனம்!

**புதுடெல்லி, மே4–**

**வணிக சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை ஒரேநாளில் 993 ரூபாய் உயர்த்தப்பட்டிருப்பதற்கு மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அடுத்து பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.**



காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், தேர்தல் முடிந்த உடன் பணவீக்கத்தின் வெப்பம் தாக்கும் என தான் கூறியதை சுட்டிக்காட்டியுள்ளார்.

மாதத்தின் முதல்நாளில் வணிக பயன்பாட்டு சிலிண்டரின் விலை 993 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. இதுதான் ஒரேநாளில் அதிகளவிலான விலை உயர்வு என்றும், இது பா.ஜ.க. அரசின் தேர்தலுக்கான கட்டணம் என்றும் ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

பிப்ரவரி மாதத்தில் இருந்து தற்போது வரை ஆயிரத்து 380 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது, 3 மாதத்தில் 81 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது என்றும், இந்த விலை உயர்வு டீக்கடை, உணவகங்கள், பேக்கரி, இனிப்பு கடைகள் மட்டுமின்றி மக்களின் அடுப்பங்கரையையும் அதிகளவு பாதிக்கும் என்று ராகுல்காந்தி கூறியுள்ளார்.

தேர்தல் முடிந்த கையுடன் முதலாவதாக சமையல் எரிவாயு விலையை உயர்த்தியுள்ள பா.ஜ.க. அரசு, அடுத்து பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தும் என்று ராகுல்காந்தி மீண்டும் எச்சரித்துள்ளார்.

---

## மும்பையில் ரூ.1,754 கோடி மதிப்பிலான

# போதைப்பொருட்கள் பறிமுதல்!

மும்பை, மே 4–

349 கிலோ எடையுள்ள உயர்தர போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மிகப் பெரிய போதைப்பொருள் கடத்தல் கும்பலை மகாராஷ்டிரா காவல்துறை கைது செய்தது.

பா.ஜ.க., ஆளும் மகாராஷ்டிரா மாநிலத்தில் ஆயிரத்து 754 கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மிகப்பெரிய போதைப் பொருள் கடத்தல் கும்பலை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

பா.ஜ.க. ஆளும் மகாராஷ்டிர மாநிலத்தில் போதைப்பொருட்களின் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வெளிநாடுகளில் இருந்து கடத்தி வரப்படும் உயரக போதைப்பொருட்கள் மாநிலம் முழுவதும் கொண்டு செல்லப்படுகிறது. இந்த சூழலில் மும்பையில் 349 கிலோ எடையுள்ள உயர்தர போதைப்பொருட்களை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர். பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருளின் மதிப்பு ஆயிரத்து 745 கோடி ஆகும். சிறிய அளவிலான போதைப்பொருள் கடத்தல் தொடர்பான விசாரணையின் போது மிகப்பெரிய போதைப் பொருள் கடத்தல் கும்பல் சிக்கியுள்ளது. போதைப் பொருள் கடத்தல் தொடர்பாக தேசிய போதைப்பொருள் தடுப்பு முகமை விசாரணை நடத்தி வருகிறது.